ஆண்டனி சொன்னதுபோல் இந்த இரண்டு லட்சத்தை வைத்து ஒன்றும் சாதிக்க முடியாது. என்ஜினியரிங் படித்த கடனை மாதா மாதம் வாப்பா கட்டிக் கொண்டு வருகிறார். அதை முழுவதுமாக அடைக்க வேண்டும். கடை வைப்பதற்காகவும் கடன் வாங்கியிருக்கிறார். அதையெல்லாம் விட இந்தக் குடும்பத்தை நடத்த எத்தனைச் சுமைகள்? வாப்பா எதையும் வெளிப்படையாகச் சொன்னதில்லை. ஆனால் அவரும் சித்தப்பாவும் பேசிக் கொள்வதை அவன் பல முறை கேட்டிருக்கிறான். 'பணப் பற்றாக்குறை கழுத்தை நெறிப்பதாக' பல முறை வாப்பா சொல்லி அவன் கேட்டிருக்கிறான்.

கொஞ்ச நேரத்தில் ராயப்பேட்டையில் இருந்து அருமையான மேஜை, நாற்காலி வந்து இறங்கியது. வாப்பா நம்ப முடியாமல் பார்த்தார். முஸ்தஃபா அவரை அழைத்து வந்து அமர வைத்தான். அவர் அதில் அமர்ந்துகொண்டு ஆசையுடன் தொட்டுப் பார்த்தார். "நவாஸ்..ஏதுடா.. திடீர்னு இவ்வளவு பணம்?" என்றார்.

இந்தக்கேள்விக்கான பதிலை முஸ்தஃபா ஏற்கெனவே தயார் செய்து வைத்திருந்தான். "வாப்பா ஒரு பிராஜக்ட் வந்தது... நம்ம ஆண்டனிதான் கொடுத்தான். சிங்கப்பூர் ஐ.டி. கம்பெனி. அட்வான்ஸ் கொடுத்தாங்க.. அதான்.."

"ஆண்டனி நல்ல காண்டாக்ட் உள்ள தம்பிடா.. நல்ல பையன்" என்றார் வாப்பா.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் பொதுவாகச் சிரித்து வைத்தான். ஆனால் உள்ளுக்குள் கலக்கமாகவே இருந்தது.

சுந்தர் வீட்டில் ஒரே கொண்டாட்டம். அவன் பரப்பி வைத்திருந்த பொருட்கள் பெரிய ரகளையே செய்திருந்தன. அம்மா, பாட்டி, அக்கா சந்திராவுக்கு அவன் எடுத்து வந்திருந்த புடவைகள் மிக காஸ்ட்லியானவை. அதன் விலையைப் பார்த்து அவர்கள் வியந்தார்கள். செல்லமாகக் கோபித்தார்கள். "ஏன்டா இவ்வளவு காசு கொடுத்து வாங்கின? கொழுப்பா?" என்றாள் சந்திரா.

"போட்டுக்கக்கா... வாழ்க்கையில சில விஷயங்களை எப்பத்தான் அனுபவிக்கிறது?" என்றான் சுந்தர்.

சுந்தரின் அப்பா அவன் வாங்கி வந்திருந்த ஆலன் சோலி சட்டையைத் தொட்டுப் பார்த்தபடி, "என்னடா திடீர்னு இவ்வளவு பணம்?" என்றார்.

"ஆண்டனி புதுசா ஒரு பிஸினஸ் ஆரம்பிச்சிருக்காம்பா.. ஒரு பிராஜக்ட் டிஸைன் பண்ணிக் கொடுத்தேன்.. அட்வான்ஸ் கொடுத்தான்.."

"என்ன பிஸினஸ்டா?"

"சாஃப்ட்வேர்பா.."

"நல்லா இருந்தா சரி..."

சுந்தர் லெதர் பையை பீரோவுக்குள் வைத்தான். வைக்கும் போது அதை ஆசையுடன் தடவிக் கொடுத்தான்.

